2017 ஜூன் 22]

நிலங்கள் இருந்தால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு மட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் எங்கெல்லாம் வீடுகள் வேண்டுமென்று மக்கள் கேட்கின்றார்களோ அந்தந்த நகராட்சிகளின் அருகில் இருக்கின்ற வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன 5 பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சியில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

66—

வட்ட மருத்துவமனை

***1029—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, அணைக்கட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே அரசாணை எண் 231, நாள் 23—9—2016 அன்று தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத்தினுடைய தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், வருங்காலத் தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம், அண்ணன் தளபதி அவர்களுக்கும், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஆர். காந்தி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த வருடம் நவம்பர் மாதம் அணைக்கட்டு ஆரம்ப சுகாதார நிலையம், வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால், இதுநாள்வரையில் இந்த அரசு மேற்படி மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாகவே வைத்துள்ளது. ஏறக்குறைய 50, 60 கிராமங்களை உள்ளடக்கியது அணைக்கட்டு தொகுதி.*

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *குறிப்பாக மலைக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்லவேண்டுமென்ற நிலையில் இருக்கின்றனர். 60 கிராம மக்களும் கூடுதல் மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால் வேலூருக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. தரம் உயர்த்தப்பட்ட அந்த மருத்துவமனையில் இதுவரையில் மருத்துவர்களே இல்லை என்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. அந்த மருத்துவமனைக்கு வருகின்ற ஒரு மருத்துவரும், ஆம்பூரிலிருந்து* deputation*—ல் பணிபுரிகின்ற மருத்துவராக இருக்கின்றார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *எனவே, தயவுசெய்து அறிவிக்கப்பட்டிருக்கிற அந்த வட்டார மருத்துவமனையை உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய 100 படுக்கைகள் கொண்ட*

மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவேண்டும் என்றும், தரம் உயர்த்தப்பட்ட அந்த மருத்துவமனைக்கு உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்—ரே பிரிவு, பொது நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கம், பிணவறை போன்ற அனைத்து வசதிகளுடன் அறுவை சிகிச்சை மருத்துவர், மகப்பேறு மருத்துவர், கண் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை மருத்துவர், தோல் நோய் மருத்துவர், இதய நோய் மருத்துவர் ஆகியோரை பணியமர்த்தி தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குண்டான ஆரம்பக் கட்டப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. 17 புதிய பணியிடங்கள் அந்த மருத்துவமனைக்காகக் கூடுதலாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. We have created 17 new posts. அவர்களெல்லாம் பணியில் நியமிக்கப்படுவார்கள். ரூ.45 இலட்சம் நிதியில் கட்டடம் கட்டப்படும். அந்த மருத்துவமனை ஏற்கெனவே 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. இப்போது 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படவிருக்கிறது. Additional ஆக 30 படுக்கைகள் சேர்க்கப்படவுள்ளன. மொத்தம் 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு தற்போது estimate prepare ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, மேலே குறிப்பிட்டபடி ரூ.45 இலட்சம் நிதியில் கட்டடம் கட்டும் பணிகள் உடனடியாகத் துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அவசர சிகிச்சைப் பிரிவு, ஆண்கள் பிரிவு, ortho பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கான கட்டடங்கள் அதிலே அடங்கும். 17 பணியிடங்களுக்கும் கலந்தாய்வு மூலமாக மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து paramedical staff–ம் உடனடியாக நியமிக்கப்படுவார்கள். அந்த மருத்துவமனை முழு அளவில் தாலுகா மருத்துவமனையாகச் செயல்படத் துவங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் அமைந்திருக்கின்ற அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ஒருவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டால் உடனடியாக* angio *செய்வதற்குண்டான வசதிகள் இல்லை. அது மருத்துவமனை மட்டும் கிடையாது, மருத்துவக் கல்லூரியும்கூட. இருப்பினும், அந்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில்* angio *செய்வதற்குண்டான* cath lab *வசதி இல்லை.* Urology department, *மற்றும்* Cardiology department *அந்த மருத்துவமனையில் இல்லை.* Cardiothoracic surgery, Neuro Surgery *செய்வதற்கான வசதிகள் அந்த மருத்துவமனையில் இல்லை. அந்த மருத்துவமனையில் 10* dialysis machines *இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், கேள்வியை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *கேள்வியைத்தான் நான் கேட்கிறேன். சீக்கிரம் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு பரிந்துரை செய்கிறீர்களே?*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *அதனால், அந்த மருத்துவமனைக்கு* nephrologist *ஒருவரை நிரந்தரமாக நியமித்தால், மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளுக்குப் பயனாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சற்றேறக்குறைய 38 ஏக்கர் பரப்பளவுகொண்ட அந்த மருத்துவமனையில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், ஒரு multi storeyed building*—ஐ அரசு அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

அந்த மருத்துவமனையிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரானது பக்கத்தில் இருக்கின்ற சப்தலிபுரம் ஏரியில் கலப்பதால், நீர் மாசுபடுகிற நிலை உருவாகியிருக்கிறது. மேலும், பெண்ணாத்தூர் பேரூராட்சி போன்ற பகுதிகளில் குடிநீர் மாசுபடுகின்ற

காரணத்தினால், உடனடியாக அங்கே ஒரு sewage treatment plant–ஐ தயவுசெய்து இந்த அரசு அமைத்துத் தந்து அப்பகுதி மக்களுடைய நீராதாரத்தைப் பாதுகாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–05

குறிப்பாக, வேலூர் மாவட்டத்தில் இருக்கின்ற மக்கள், மருத்துவமனைக்கு வருகின்றபோது, குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. தலைவர் கலைஞருடைய ஆட்சியில், அண்ணன் தளபதியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அந்த மருத்துவமனையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரை வந்து, பிறகு நின்றுபோய் இருக்கின்றது. அந்தத் திட்டத்தை மேலும் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு நீட்டித்து, அந்த மருத்துவமனைக்கும் சேர்த்து குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்பது பழமொழி. ஆனால், கேட்காமலேயே திட்டங்களை அள்ளிக் கொடுத்தவர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதுவெல்லாம் இல்லை, இல்லையென்று சொன்னீர்களோ, அத்தனை இல்லையையும் தாண்டி, கூடுதலாக உங்களுக்குக் கிடைக்கும் என்ற நல்ல பதிலை, உறுதியை இந்தச் சட்டமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 11 மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்களுக்கு JICA Project மூலம் ரூ.1,634 கோடி அளவு நிதிக்கான ஒப்புதலைப் பெற்றிருக்கிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஜப்பான் நிறுவனத்தோடு அந்தத் திட்டத்தைத் தங்களுடைய பொற்கரங்களால் துவக்கி வைக்க இருக்கின்றார்கள். அதிலே தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய வேலூர் தொகுதியிலுள்ள மருத்துவக் கல்லூரிக்கு நீங்கள்

குறிப்பிட்ட அத்தனை வசதிகளும், இன்னும் நீங்கள் கேட்காத வசதிகளும் கிடைத்திருக்கின்றன. மொத்தம் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் கட்டடங்களைக் கட்டுவதற்காக மட்டும் 356 கோடி ரூபாயும், equipments–க்கு 447 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது தலைநகரமாக இருக்கக்கூடிய மதுரை, சென்னையில் இருக்கக்கூடிய கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, சேலம் மருத்துவக் கல்லூரி, தாங்கள் குறிப்பிட்ட வேலூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 11 மருத்துவக் கல்லூரிகளுக்கு மட்டும் ரூ.853 கோடியே 91 இலட்சம் நிதி பெறப்பட்டிருக்கிறது. அதற்குண்டான திட்டப் பணிகள் இன்னும் இரண்டு வாரங்களில் தொடங்கப்படும் என்ற நல்ல செய்தியைக் குறிப்பிடுகின்றேன். நீங்கள் குறிப்பிட்ட அத்தனை வசதிகளும், இன்னும் குறிப்பிடாத வசதிகளும் வேலூருக்கு வந்து சேரும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல் அவர்கள்.*

திரு. ச. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமலும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்களையெல்லாம் அரவணைத்து, வழிநடத்தி, நாடு போற்றும் நல்லரசை நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

காடையாம்பட்டி அரசு மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருவாய்த் துறையின்கீழ் ஒரு புதிய தாலுகா உருவாக்கப்படுகின்றபோது, வருவாய்த் துறை மட்டுமல்லாமல், வருவாய்த் துறையோடு, மருத்துவத்

2017 ஜூன் 22]

துறையும் சேர்ந்து அதாவது அங்குள்ள மருத்துவமனையும் தரம் உயர்த்தப்படும் என்ற ஓர் அருமையான கொள்கை முடிவை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் எடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் புதிதாக எத்தனை தாலுகாக்களை உருவாக்கிக் கொடுக்கின்றார்களோ அதனடிப்படையில், மருத்துவத் துறையின் சார்பிலே அங்குள்ள மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாக உடனடியாக தரமுயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை வருவாய்த் துறையால் உருவாக்கப்பட்ட 52 புதிய தாலுகாக்களில் உள்ள மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதற்காக ரூ.94.82 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 10 புதிய தாலுகாக்களில் உள்ள மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தப்படும். தாங்கள் குறிப்பிடுகின்ற காடையாம்பட்டி அரசு மருத்துவமனையும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகராட்சியின்கீழ் உள்ள 18—வது வார்டுக்குட்பட்ட முத்தரையர் நகர், திரேஸ்புரம் மற்றும் மேட்டுப்பட்டி ஆகிய பகுதிகளில் ஏழை, எளிய மீனவர்கள் மற்றும் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் வசித்து வருகின்றார்கள். அவசர காலங்களில் மருத்துவ வசதிகளைப் பெறவும், முதலுதவியைப் பெறவும் அருகில் எந்தவோர் அரசு மருத்துவனையும் இல்லாததால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் சுகாதார மையத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களிலும் தேவைப்படுகின்ற*

இடங்களில் Urban PHCs–களை அமைப்பதற்கான பணிகளை அரசு வேகமாகச் செய்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிகளில் உரிய ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–10

கோவை அரசு மருத்துவமனை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசின் தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்குள்ள மருத்துவமனைக்கு கூடுதலாக ஒரு M.R.I. Scan–ம், C.T. Scan–ம் தேவைப்படுகின்றன. ஏனென்றால், கேரளாவிலிருந்து மக்கள் சிகிச்சைக்காக அதிக அளவில் இங்கு வருகின்றார்கள். கோயம்புத்தூர் மட்டுமல்ல ஈரோடு, சேலம், நீலகிரி மாவட்ட மக்களும் அந்த மருத்துவமனையைப் பயன்படுத்துகிறார்கள். வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில் கேட்டதைக் கொடுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டுதான் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு புதிய நூற்றாண்டு விழாக் கட்டடமும்,*

56 கோடி ரூபாய்க்கு equipments–ம் கொடுத்து சிறப்பாகத் தொடங்கிவைத்தார்கள். அது நல்லமுறையில் செயல்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அரசின் நோக்கம் சென்னை எப்படி இந்திய அளவில் ஒரு மருத்துவ தலைநகரமாக இருக்கிறதோ, அதேபோல, Tier II city என்று சொல்லக்கூடிய சென்னைக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களையும் மருத்துவத் தலைநகரங்களாக உருவாக்குகின்ற முயற்சிதான், JICA திட்டத்தின்கீழான முயற்சி. தங்கள் மாவட்டத்திற்கு ஒரு நல்ல செய்தியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே MRI Scan, CT Scan ஆகியவை இங்கே செயல்பட்டாலும்கூட இப்பொழுது கூடுதலாக MRI Scan, CT Scan வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் நிச்சயமாகக் கொடுக்கப்படும். கூடுதலாக MRI Scan, CT Scan, Operation theatre உள்ளிட்ட அத்தனை வசதிகளும் 118 கோடி ரூபாய்க்கு கட்டடப் பணிகளும், 165 கோடி ரூபாய்க்கு equipments–ம் என மொத்தம் 283 கோடி ரூபாய்க்கு இந்தத் திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தயார்நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்க விழாவை முடித்து வைத்தபின் அந்தத் திட்டப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்ற நல்ல செய்தியை கொங்கு மாவட்ட உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. **ஜெயராமன்: (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியை, தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,நோயே இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியின் 25 ஆண்டுகால கோரிக்கைகளான வடசித்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கும், ராமப்பட்டினம் கிராமத்தில் செயல்பட்டுக்

கொண்டிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கும் முன்வருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டிருப்பது புதிய ஆரம்ப சுகாதார நிலையம். அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு இந்த ஆண்டு அது வழங்கப்படும். அதேபோல மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு மருத்துவமனையை தரம் உயர்த்தவேண்டும் என்று கேட்டிருந்தார். அரசு துறை ரீதியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட, நான் பிறந்து வளர்ந்த அகஸ்தீஸ்வரத்தில் செயல்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் சுற்றுவட்டாரத்திலிருந்து மக்கள் சிகிச்சைக்கு போகின்றபோது டாக்டர்கள் இல்லை, உபகரணங்கள் இல்லை, டாக்டர்கள் வந்த பிறகுதான் சொல்லமுடியும் என்று சொல்லுகின்ற ஒரு நிலை கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையத்தில் உள்ளது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவரது கனிவான பார்வையை எங்கள் சொந்த ஊருக்கும் செலுத்தி, அந்த சுற்று வட்டார மக்களை வாழவைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த அகஸ்தீஸ்வரம் மருத்துவமனைக்கு உடனடியாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். பொதுவாக TNPSC மூலமாகத்தான் மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். காலதாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனியாக MRB மருத்துவப் பணியாளர் தேர்வு ஆணையத்தை இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஆணையத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையத்தின்மூலம் இதுவரை இருபதாயிரம் மருத்துவர்கள் குறுகிய காலத்தில் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் கலந்தாய்வு நடந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுக்க இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ள காலிப் பணியிடங்கள், மேற்படிப்புக்காகச் சென்றதில் ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் எல்லாவற்றுக்கும் இந்த வாரத்தில் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு, நியமனம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அகஸ்தீஸ்வரம் மருத்துவமனையும் கருத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

வேளாண்மை விதைப் பண்ணை

***5132— திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதியில் வேளாண்மை விதைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?